# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

**Vol - 17** | **January ஜனவரி** | **2017**

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



**உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள் : கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்**

ஏசாயா 55:3

கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE**

ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| நிச்சயமான கிருபைகள்... | 3 |
| தேவ கிருபை | 5 |
| கிருபை பெற்றவளே வாழ்க ! | 7 |
| தேவனுடைய கிருபை அவர் ... | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,



## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.










**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

அளவில்லாத கிருபையை அருளும் அன்பரின் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.90**

ஆசிரியர் உரை

# நிச்சயமான கிருபைகள்! நித்திய உடன்படிக்கை!



P.C. பிலேமோன் ராஜா

அன்பான வாசகர்கள் அனைவருக்கும், கிருபை நிறைந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால், உங்கள் அனைவருக்கும் தேவ கிருபை நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**ஏசாயா 55:3** "உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்".

தீர்க்கன் ஏசாயாவின் புத்தகம் நமக்கு பெரிய செய்தியை சொல்லுகிறது. அந்த செய்தியில் நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறது. நமது விசுவாசத்தை பகிர்ந்துக் கொள்ளுங்கள். நீங்கள் நம்பி வாழ்கிறீர்களல்லவா, உங்கள் நம்பிக்கையை பகிருங்கள் என உற்சாகப்படுத்துகிறேன். நீங்களும் நானும் வாழப்பிறந்தவர்களல்ல, அநேரை வாழவைக்கப் பிறந்தவர்கள். நாம் மாத்திரம் வாழும்படியாக இயேசுவிடம் வந்தவர்கள் அல்ல, அநேகரை வாழவைக்கும்படியாக இயேசுவிடம் வந்தவர்கள். **2கொரி 5:17** "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின."

இந்த ஆண்டிலே நீங்கள் எத்தனை பேரை வாழவைக்க திட்டம் வைத்துள்ளீர்கள். ஒரு பெரிய இறைகூவல் இங்கே சொல்லப்பட்டுள்ளது ஏசாயாவின் தொனி பலவந்தம் செய்வதாக உள்ளது.




**ஏசாயா 55:1** ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.

நாம் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் அல்ல, கொடுக்க வந்தவர்கள். **லூக் 19:26** "அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." உள்ளவனுக்கு கொடுக்கப்படும் என்றால், என்னிடம் ஒன்றும் இல்லையே இல்லாதவனிடம் பிடுங்கிவிடுவாரா? என்பது அவிசுவாச சிந்தனை. எனக்கு சொஞ்சமிருந்தாலும் போதும், இன்னும் கூடக் கொடுக்கப்படும் என்பதே விசுவாச பார்வை.

## விசுவாசிக்கிறவன் எவனோ (Whosoever Believes)



**யோவான் 3:16** "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய வாழ்வை, தரம் நிறைந்த வாழ்வை, நிலையான வாழ்வை, உறுதியான வாழ்வை, தகுதியுள்ள வாழ்வை வாழும்படி அழைக்கிறார். இந்த ஆண்டிலே நீங்கள் தரமுள்ள, தகுதியுள்ள வாழ்வை வாழ்ந்தே ஆகவேண்டும்! இந்த உனது வாழ்வை அநேகர் பார்த்து, தாகம் கொள்ள வேண்டும். அந்த தாகம் தோல்வியை நோக்கியல்ல விருத்தியை, வெற்றியை, நித்தியத்தை நோக்கினதாக இருக்க வேண்டும்.



**ஏசாயா 55:3** "உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாமிதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நிதிதிய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்''. வேதாகமத்திலுள்ள அத்தனை

புத்தகமும் தேவன் நமக்கு கொடுத்ததுதான். ஆனால் இப்படி ஒவ்வொன்றாக படித்து கொஞ்சம் கொஞ்சமாக புரிந்துக்கொண்டு, பயிற்சி செய்ய முயச்சி செய்கிறோம்.

வசனமும், அதின் புரிந்து கொள்ளுதலும் நம்மில் நிறைய நிறைய, நாம் பொங்குவோம்! நிறைவோம்! நிறைந்து வழிவோம். இதைத்தான் அபிஷேகம் என சொல்லுகிறது வேதம் வசனத்தினை கேட்டல், புரிதல், பார்த்தல், அறிதல், சுவாசித்தல், விசுவாசித்தல், வசனத்தோடு இருத்தல், வசனத்தினால் நிறைதல், வசனத்தின்படி என்னை நான் மாற்றி அமைப்பது ஆகியவையே ஆவியின் நிறைவு.

தேவ கிருபையை நமக்கு கொடுக்கிறார். அந்த கிருபை நம்மை பிழைக்க வைக்கும், மற்றும் அந்த கிருபையை நித்திய உடன்படிக்கையாக பண்ணுகிறேன் என்கிறார். மேலும் அந்த உடன்படிக்கையை நாம் புரிந்து கொள்ள தாவீது என்ற ஒருவனை அவர் அடையாளம் காண்பிக்கிறார்.

எந்த பகுதியை நீங்கள் வேதாகமத்தில் படித்தாலும், அந்த பகுதியில் அதற்குரிய எல்லா செய்தியும் இருக்கும். இன்னும் ஆழமாக கற்றுக் கொள்ள அதை சார்ந்த பகுதிகளையும் படிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகமும் தன்னிலே தானே நிற்கிற புத்தகம். அதை இன்னும் ஆழமாக விளங்கிக்கொள்ள, பழைய ஏற்பாட்டின் பிற பகுதிகளையும் படிக்கலாம். நிச்சயமான கிருபைகளை அவர் நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துகிறவராயிருக்கிறார்.

இதன் விளைவு நம்முடைய ஆத்துமா பிழைக்கும்! எப்பொழுது நம்முடைய ஆத்துமா பிழைக்கும் ? அவர் சொல்வதை கேட்கனும், அவர் சொல்வதை கேட்க அவரிடம் வரவேண்டும். அவரிடம் வர அவரை சார்ந்து இருக்க வேண்டும். அவர் தோளில் ஆசுவாசப்படுத்திகொள்ளலாம். நான் அடுத்த வேலை செய்ய என்னை பெலப்படுத்திகொள்ளலாம். வந்து காத்திருங்கள்; சாய்ந்திருக்க தோளில்லாமல் தடுமாறினோம். நாம் சாய்ந்த தோள்களும் தடுமாறி விழுந்தது; அல்லது நம்மை தள்ளிவிட்டு அந்த தோள்கள் மட்டும் பத்திரமாக நின்றது. இப்படி பலவித அனுபவம் நமக்கு இருந்திருக்கும்.

## கவனமாக கையாளுங்கள் (Handle With Care)

தேவனுடைய கிருபையை பத்திரமாக கையாளுங்கள். இந்த கிருபையை பயன்படுத்தினால் லாபம்! நாம் பயன்படுத்தாவிட்டால் நஷ்டம்! இந்த கிருபை சாதாரணமானது அல்ல; அது ஒரு உடன்படிக்கை சார்ந்த கிருபையாக உள்ளது.




**எரே 31:31–34** “இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்”.

“அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனதயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்”.

உங்கள் மனதை திறந்து, இதை புரிந்து, உங்கள் இருதயத்தில் இதை வையுங்கள். இருதயத்தில் வசனம் விதைக்கப்படட்டும், இருதயம் வசனத்தினால் பாதுகாக்கப்படட்டும். அது முளைத்து வளரட்டும், நாமும் வளருவோம். அது விருத்தியாகட்டும், நாமும் விருத்தியாவோம். தேவனை தனிப்பட்ட வகையில் நான் எனக்கு என்று விளங்கி கொண்டால் தான் அவரிடத்தில் நெருங்கவும், அவருடைய காரியத்தில் ஈடுபடவும் ஆர்வம் வரும்.

தேவ கிருபை உங்கள் வாழ்வில் இந்தப் புத்தாண்டில் வளம் சேர்ப்பதாக !

(தொடரும்)

சிறப்பு செய்தி : தொழுகை

# பாடம் : 5 தேவ கிருபை

சகோ. கிங்ஸ்லி ராஜா



தேவனுடைய 'கிருபை' என்பது 'தகுதியற்றவர்களுக்கு கிடைக்கும் ஆதரவு' அல்லது ஈவாகும். தேவனுடைய கிருபையினாலே ஏதோ ஒன்றை பெறுவது என்பது, தகுதியில்லாமல் நமக்கு கிடைக்கும் பரிசு ஆகும்; அதாவது அதை நாம் சம்பாதிக்கவில்லை. இப்பொழுது பைபிள் சொல்வதை கவனித்தோமானாமல், நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டுள்ளோம் (எபே 2:8) என்கிறது. மேலும் இரட்சிப்பு என்பது தேவனிடமிருந்து கிடைக்கும் பரிசாகும் (ரோ 6:23). மேலும் பைபிள் கூறுகையில், நாம் இரட்சிக்கப்பட தகுதியற்றவர்கள், அதை சம்பாதிக்கவும் முடியாது (எபே 2:9:2 தீமோ 1:9). என்கிறது. அப்படியானால், தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்வதில் மனிதனுடைய செயல் என்னவென்று நாம் கூறமுடியும் ?

நாம் சுவிசேஷத்தைக் கேட்கும்போது, முழு மனதுடன் அதை விசுவாசித்து, பாவங்கலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்து, நம் பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெறுகிறோம். இவ்வாறெல்லாம் நாம் செய்தாலும், தேவ கிருபையின் மூலமாகவே இயேசுவின் இரத்தினாலே விலைக்கு வாங்கப்பட்ட இரட்சிப்பை நாம் பெற தகுதியுடைவர்களானோம்; சம்பாதித்துக் கொண்டோம் என்று நாம் கூற முடியாது. அதை நாம் பெற்றுக் கொண்டதற்கான காரணம் என்னவெனில், தேவன் அதை கொடுத்தார்; மேலும் நாம் அதை பெறுவதற்கான தேவனுடைய நிபந்தனைகளை சந்தித்தோம் என்பதே! மாறாக, நாம் அதை சம்பாதிக்கவுமில்லை; அதை பெற நமக்கு தகுதியும் இல்லை. பிரியமானவர்களே! இரட்சிப்பிற்கு உள்ள அந்த அளவில்லா விலையுடன் நாம் ஒப்பிடுக்கையில், நம்முடைய கீழ்படிதலின் மதிப்பு பூஜ்யமே !

உதாரணமாக, நாகமானை எடுத்துகொள்வோம்! இவன் குஷ்டரோகம் உடைய மனிதன். இங்கே அவன், அந்த குஷ்டரோகத்திலிருந்து விடுபட எந்த தகுதியும் அல்லது அதிலிருந்து விடுதலையை சம்பாதிக்க முடியாதவனுமாக இருந்தான். ஆனாலும், அவன் ஒரு செயலை செய்ய முடியும் என்று அவனுக்கு சொல்லப்பட்டது; அதாவது, யோர்தான் நதியில் 7 முறை மூழ்க வேண்டும் என்பதே! எந்த ஒரு மனிதனும் குடரோகம் நீங்க, யோர்தானில் 7 முறை மூழ்குவது என்பது மதிப்பில்லாத ஒரு செயல். ஆனாலும், அந்த வியாதியிலிருந்து நாகமான் சுகமாவதற்கு , அது தேவன் கொடுத்த நிபந்தனையாக இருந்தது. ஏழு முறை யோர்தானில் மூழ்கும் நாகமானின் செயல் கீழ்ப்படிதலாக இருந்தது; ஆனாலும் தேவன் அவனுக்கு கொடுத்த கிருபைக்கு (ஈவுக்கு) முன் அது மதிப்பற்றதாக இருந்தது. தேவன் தன்னுடைய கிருபையினாலேயே நாகமானுக்கு சுகம் கொடுத்தார்.



அப்படியானால் தவறான புரிந்துகொள்ளுதல் இங்கே எந்த இடத்தில் உள்ளது? இன்று அநேகர், தேவ கிருபையை தகுதியற்றவர்களுக்கான ஈவு என்பதுடன், அது நிபந்தனையற்றது என்ற விளக்கமளிக்கின்றனர். ஆனால் அது தவறான எண்ணம். தேவனுடைய கிருபையானது தகுதியில்லாமல் கிடைக்கும் ஈவு என்றபோதும், அது எந்தவித நிபந்தனையும் இல்லாமல் கிடைப்பதில்லை தகுதியில்லாமல் கிடைப்பது என்றால் சம்பாதிக்க முடியாதது; நிபந்தனையற்றது என்றால் மறுக்க முடியாத ஒன்று !



உதாரணமாக, நம்முடைய வாழ்க்கையானது, நம்முடைய பெற்றோர் மற்றும் தேவனால் நமக்கு கிடைத்த நிபந்தனையற்ற (Unconditional) ஈவு ! நாம் கருவாக உருவான பின், அதை நாம் மறுக்க, ஏதும் 'செய்ய' முடியாது! அதோடுகூட நம் வாழ்க்கை 'தகுதியற்ற ஈவு', ஏனெனில் நாம் அதை சம்பாதிக்க ஏதும் செய்யலாகாது. மாறாக, உணவு, உடை மற்றும் தங்குமிடம் ஆகியன பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு கிடைக்கும் தகுதியற்றவர்க்கான ஈவு.

என்றாலும், பிள்ளைகள் அந்த ஈவை அனுபவிக்கும்படி உணவை சாப்பிட வேண்டும், உடையை உடுத்த வேண்டும் மற்றும் வீட்டில் மழை வெயில் காலத்தில் தங்க வேண்டும். அப்படியானால் இந்த ஈவுகள் (gifts) தகுதியில்லாமல் பிள்ளைகளுக்கு கிடைத்தாலும் அவை நிபந்தனையுடன் அனுபவிக்கப்பட வேண்டும். பிரியமானவரே, தகுதியில்லாமல் கிடைக்கும் பரிசுக்கும், நிபந்தனையற்ற பரிசுக்கும் வித்தியாசம் உண்டு. தேவ கிருபையும் அப்படிப்பட்டதே ! தேவ கிருபை தகுதியில்லாமல் கிடைக்கும் ஈவு (Unmerited favour) ! அது நிபந்தனையில்லாமல் (Unconditional) பெறும் ஈவு கிடையாது! தேவ கிருபையினால் கிடைக்கும் இரட்சிப்பும் அப்படிப்பட்டதே! "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" **(மாற்கு 16:16).**

மேலும் வாசகரே ! இந்த ஆண்டு முழுவதும் தேவ கிருபையை ஜெபத்தில் கேட்டுக்கொண்டிருப்பதோடு நில்லாமல், அதைப்பெற என்ன செய்ய வேண்டும் என வேதத்தை ஆராய்வோம் !

தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக !

## சிறுவர்க்கான கேள்விகள்

1. மோசே எத்தனை மாதம் ஒளித்து வைக்கப்பட்டார் ?
2. மோசேயை நதியிலிருந்து எடுத்தது யார்?
3. மோசே எங்கு வளர்ந்தார் ?
4. சகேயுவின் வீட்டிற்கு சென்றது யார் ?
5. சகேயு மனமாறி சொன்னது என்ன ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-02-2017**

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# கிருபை பெற்றவளே வாழ்க !

பிரியமான சகோதரிகளே ! உங்கள் அனைவருக்கும் கிருபையுள்ள ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திங்கள்.

நீங்கள் அனைவரும் இந்த புத்தாண்டை கர்த்தருடைய கிருபையால், கர்த்தருக்குள் நன்றாக கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என கிறிஸ்துவிற்குள் நம்புகிறேன். இந்த மாதம் "கிருபை பெற்றவளே வாழ்க" என வாழ்த்து பெற்ற மரியளை பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அன்பான சகோதரிகளே ! இந்த உலகத்தில் வாழும் மனுக்குலத்தில் ஒருவர்கூட, பாவியாகவே இருந்து தன் ஆத்துமாவை அழித்து,நித்திய வாழ்வை வீணடித்துவிடக்கூடாது என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. **மத்–18:14** "இவ்விதமாக, இந்தச் சிறயரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல". மற்றும், **1 தீமோ 2:4** "எல்லா மனுரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்".

நம்மை நாமே மீட்டுக்கொள்ள திராணியில்லாதவர்களாக நாம் இருக்கின்றோம் **எரேமியா 10:23** "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" என்கிறது. நமக்கு சரியாக தோன்றுகிற வழிகளின் முடிவும் அந்தோ பரிதாபமாக இருக்கிறது. **நீதி 14:12** "மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்". ஆகையால் நம்மை பாவத்தின் பெருங்கொடுமையிலிருந்து மீட்க ஒருவர் தேவைபட்டார். **ஆதியாகமம் 3:15**ல் சொல்லப்பட்டபடி, அவர் பெண்ணின் வித்தாக வரவேண்டும். **ஏசாயா 7:14ல்** சொல்லப்பட்டபடி, அவர் கன்னிப்பெண்ணினால் பிறக்க வேண்டும். காலங்கள் நிறைவேறும் போது எல்லாம் வல்ல தேவன், தனது ஒரே பேரான குமாரானாகிய இயேசுவை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே, தாவீதின் வம்சவழியில் வந்த மரியாள் என்ற கன்னிப்பெண்ணின் மூலம், இப்புவியில் மனுக்குலம் இரட்சிக்கப்பட மனிதனாக பிறக்கச் செய்தார். **கலா 4:5** "காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடதிதிற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் **1தீமோ 1:15** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்".



இயேசு கிறிஸ்து மானுடனாக இப்புவியில் பிறந்த அந்தக்காலக்கட்டத்தில், தாவிதீன் வம்சத்தில் நிறைய கன்னிப்பெண்கள் இருந்திருக்க கூடும். அவர்களுக்கு எல்லாம் கிடைக்காத பாக்கியம் மரியாளுக்கு கிடைத்தப்படியினால் தான், தேவனுடைய தூதனாகிய காபிரியேல், கன்னிப்பெண்ணான மரியாளை பார்த்து: "கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்தீரிகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள்" **(லூாக்கா 1:28)** என்று வாழ்த்தினார்.

இந்த மேன்மையான கிருபையை மரியாள் பெற எது காரணமாக இருந்தது ?

**லூாக்கா 1:26–56** வசனங்களில் இருந்து மரியாளின் சில நற்பண்புகளை நாம் அறிய முயலுவோம்.

### 1. தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார்.

மரியாள் தனக்கு பிறக்கும் குழந்தை தெய்வீக வல்லமையால் பிறக்கும் என்பதை சரியாக புரியாதிருந்த போது, தனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை, புருஷனோடு தான் வாழவில்லை என்றும் தன் அறியாமையை வெளிப்படுத்தினாள் **(லூாக்கா 1:34)**, பரிசுத்த ஆவியின் வல்லமையினால், அந்தக் குழந்தை உன் வயிற்றில் கருவாக உருவாகும் என்று அறிவித்தவுடனே, இதோ நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது **(லூாக்கா 1:38)** என்று தேவனுடைய சித்தத்திற்கு தன்னை அப்படியே அடிமையா ஒப்புக்கொடுத்தாள். அன்பான சகோதரியே தேவனுடைய வல்லமை உங்கள் வாழ்வில் செயல்பட

மரியாளைப் போல, அடிமைப் போல் உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்கள் ஞானம் மற்றும் பலம் அல்ல, பரிசுத்த ஆவியினாலே எல்லாம் ஆகும் என்பதை நினைவில் வையுங்கள். **சகரியா 4:6** "அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

## 2. தேவன் நிமித்தம் அவமானத்தை ஏற்றார்

கர்த்தருடைய தூதனாகிய காபிரியேல் மரியாளிடம் தேவ சித்தத்தை வெளிப்படுதிய போது, அதை விசுவாசத்துடன் மரியாள் ஏற்றுக்கொண்டாள். தான் புருஷனை அறியா கன்னிப்பெண், தான் கர்ப்பமானால் என்னை எல்லோரும் அவமானப்படுத்துவார்களே என யோசிக்கக்கூட இல்லை என்பது, எவ்வளவு மேன்மையான காரியம் பாருங்கள். நம்மில் அநேகர் தேவ சித்தம் செய்ய ஒப்புக்கொடுப்போம். அதினிமித்தம் யாராவது நம்மை ஏளனமாக பேசிவிட்டாலோ, நடத்திவிட்டாலோ, பொங்கி, அப்படியே தேவ சித்ததை, கிறிஸ்துவின் சிலுவையை தூக்கியெரிந்து, நம் சுயமரியாதை எனும் பெருமையை தோளில் சுமந்து நடக்க ஆரம்பித்துவிடுகிறோம். கிறிஸ்து அவமானத்தை சகிக்க கூடியவராக தான் இருந்தார் என்பதை மறக்க வேண்டாம். **எபிரெயர் 12:2** "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்".

## 3. மற்றவர்களை மனதார வாழ்த்தினார் மற்றும் உதவினார்

மரியாளிடம் இந்தப்பகுதியில் நாம் காண்கின்ற மற்றொரு பண்பு மற்றவர்களை வாழ்த்துகிற அல்லது பாராட்டுகிற பண்பை பார்க்க முடியும். அதோடு இல்லாமல் எலிசபெத்துக்கு உதவியாக அவளுடன் 3 மாதம் தங்கியிருந்ததையும் நாம் வாசிக்க முடியும். **லூக்கா 1:39-40,56** "அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள். மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து,தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்". நாம் மற்றவர்களை அவர்களின் உயர்வை எண்ணி பொறாமைப்படாதவர்களாய், மனதார வாழ்த்துகிறவர்களாகவும் மற்றும் அவர்களுக்கு உதவுபவர்களாகவும் இருப்போம்.



## 4. சர்வ வல்ல தேவனை புகழ்ந்தார்

அடுத்ததாக நாம் மரியாளிடம் பார்க்கும் நற்பண்பு, தேவனை புகழுவதாக உள்ளது. **லூக்கா 1:46-55** அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்; இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்திக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்". நாம் எல்லாவற்றிலும் தேவனை துதிக்க வேண்டும் அல்லது நன்றி செலுத்த வேண்டும் என்பதே நம்மை குறித்த தேவ சித்தம், என்பதை ஞாபகம் கொள்வோம். **(1 தெச 5:18).**

அன்பு சகோதரியே! நாமும் மரியாளைப் போல தேவ சித்தம் செய்யும் போது, நற்பண்பினாலே ஆண்டவர் இயேசுவின் தாயைப் போல வாழ முடியும் என்பது சாத்தியமே. **மாற்கு 3:35** "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார்". ஆகையால் இந்த புத்தாண்மல் தேவ சித்தமானவைகளை மட்டும் செய்து, மரியாளை போல தேவனுடைய கிருபைகளை அளவில்லாமல் அனுபவிப்போம்!

**சகோதரி. பேபி பிலேமோன்**

# தொடர் 18 பிரசங்கி : வாழ்வின் வெறுமை; சாலமோனின் உன்னதப்பாட்டு : அன்பின் பாடல்

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : **பிரசங்கி 1–12 : உன்னதப்பாட்டு 1–3,7,8.**

## தலைப்பு

**"பிரசங்கி"** என்ற புத்தகத்தின் தலைப்பு "சபை" அல்லது "சபைகூடுகையை" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன் (ekklesia) தொடங்கி, பின்பு தொழில் அல்லது அடிப்படை தேடுதல் என்பதைச் சுட்டிக்காட்டும் (tes) என்ற முடிவைக் கூட்டுகிறது. ஆங்கிலத்தில் இதன் "Ecclesiastes" என்ற வார்த்தையானது பொதுவாக ''பிரசங்கி,'' என்று மொழிப்பெயர்க்கப்படுகிறது, ஆனால் இது "பிரசங்கி," என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இருப்பதில்லை. Ecclesiastes என்பதற்கு ''சபை மனிதன்'' என்பதே நேரடி அர்த்தமான மொழிபெயர்ப்பாகும். இன்னும் நெருக்கமாக வரக்கூடிய நவீன மொழிப்பெயர்ப்பு "lay Preacher." இவர் வழக்கமாகப் பிரசங்கிப்பவரல்ல, ஆனால் பகிர்ந்து கொள்வதற்குச் செய்தியொன்றைக் கொண்டிருப்பவர் ஆவார் – என்பது இதற்கு நெருங்கிய அர்த்தம் கொண்டுள்ள நவீன இணை வார்த்தையாகும்.

**''சாலொமோனின் உன்னதப்பாட்டு''** என்பது இப்புத்தகத்தின் முதல் வரியினுடைய சுருக்கமான வடிவமைப்பாகும்: ''சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு.'' ''உன்னதப்பாட்டு'' என்பது "பாடல்களிலேயே மகாப்பெரியது" என்பதற்கான எபிரெயச் சொல்விளக்கமாகும். சாலொமோன் 1005 பாடல்கள் எழுதினார் **(1 இராஜாக்கள் 4:32) :** இது அவருக்கு மிகப்பிரியமான ஒன்றாயிருந்தது என்பது உறுதி.

## பின்னணி

முதல் வாசிப்பில், பிரசங்கியின் புத்தகமானது ஒரு இருள்நிறைந்த புத்தகமாய் இருப்பதாகக் காணப்படுகிறது. இதன் எழுத்தாளர், சந்தோஷத்தைக் கண்டறிவதற்காக ஒவ்வொன்றையும் முயற்சி செய்திருந்து, அவை எல்லாவற்றையும் மாயையொன்று கண்டார். "எல்லாம் மாயை," என்று அவர் முடிவு செய்கின்றார். (''மாயை'' என்பது இவ்விடத்தில் ''வெறுமை, பயனற்றது'' என்று அர்த்தப்படுகிறது ) "மாயை மாயை" என்பது போன்ற சொற்றொடர்கள் இப்புத்தகத்தில் முப்பத்து நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எழுத்தாளரின் கருத்துநோக்கத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முப்பத்து ஒரு முறை பயன்படுத்தப்பட்டுள்ள "சூரியனுக்குக் கீழே" என்ற சொற்றொடர், அவரது கருத்துநோக்கத்தைப் புரிந்து கொள்வதில் ஒரு திறவுகோல் சொல்விளக்கமாக உள்ளது. "சூரியனுக்குக் கீழே" (அதாவது, இந்த வாழ்வில்), எல்லாம் வெறுமையாயிருக்கிறது. இப்புத்தகம், இவ்வாழ்வில் உள்ள விஷயங்களில் சந்தோஷத்தைக் கண்டறிய முயற்சி செய்பவர்கள் யாவருக்கும் **(லூக்கா 12 :15: பிலிப்பியர் 4:11)** வல்லமை நிறைந்த செய்தியைக் கொண்டுள்ளது. சந்தோஷத்தைக் கண்டறிவதற்கு நாம் இவ்வாழ்க்கைக்கு அப்பால் கண்ணோக்க வேண்டும் என்று இப்புத்தகம் குறிப்புணர்த்துகிறது. "தேவன்" என்ற வார்த்தை நாற்பது முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் "சூரியனுக்கு" அப்பால் "தேவனை" கண்ணோக்க வேண்டும் : பின்பு வாழ்வு கருத்துணர்வை ஏற்படுத்தும் **(12 : 13: ரோமர் 8:18–25).**

சாலொமோன் தமது முதிர்வயதில் இப்புத்தகத்தை (பிரசங்கி ) எழுதினார் என்று யூதத்துவப் பாரம்பரியம் கூறுகிறது. வரலாற்றுப் புத்தகங்கள் (1 இராஜாக்கள், 2நாளாகமங்கள்), சாலொமோன் தேவனை விட்டு விலகிச் சென்ற பின்பு தமது முதிர்வயதில் மனந்திரும்பியது பற்றிப்பதிவெதையும் செய்திருப்பது இல்லை; ஒருவேளை இப்புத்தகம் அவரது மனம் வருந்துதலின் கதறுதலாக இருக்கலாம்.

மேலும், யூதப் பாரம்பரியத்தின்படி, சாலொமோன் தமது இளம் பிராயத்தில் **உன்னதப்பாட்டை** எழுதினார் என்று கூறப்படுகிறது. அந்த எழுத்துகளில், மணவாளன் (அனேகமாக சாலொமோன்) ஒரு சில மனைவியரையே கொண்டிருந்தார் **(6 : 2, 3, 8)** என்பதால், இது உண்மையாய் இருக்கலாம். பிரசங்கியின் புத்தகத்திற்கு நேரெதிரான வகையில், இப்புத்தகத்தில் வாழ்விற்கான பேரார்வம் நிறைந்துள்ளது. இது சாலொமோன் தமது மணவாட்டியினிடத்தில் கொண்ட அன்பைக் கொண்டாடுவதாகக் காணப்படுகிறது. சாலொமோனின் திருமணங்களில் பெரும்பான்மையானவை அரசியல்ரீதியான நோக்கம் கொண்டிருந்ததால்,

அன்பிற்காகத் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது ஒரு விசேஷமான விஷயமாயிருந்தது.

உன்னதப்பாட்டில் பேசுவது யார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அடிக்கடி கடினமாக உள்ளது. எபிரெய வசனம், ஆண் மற்றும் பெண் பேசுவது போன்ற குறிப்புகளைக் கொண்டும், அடிக்கடி ஒரு தனிநபரில் இருந்து ஒரு குழுவுக்கு மாறுதல்கள் ஏற்படுவதையும் குறிப்பிடுகிறது. இதைக்காட்டுகிற பதிப்புகள் உதவி நிறைந்தவைகளாய் இருக்கின்றன.

திருமண அன்பின் முக்கியத்துவத்தைத் தேவன் உணர்ந்தறிகின்றார் என்பது இப்புத்தகத்தைக் கண்ணோக்குவதற்கான மிக எளிமையான வழியாக உள்ளது; இந்தப் புத்தகம் இஸ்ரவேல் மக்கள் மீது தேவனுடைய விசேஷித்த (தேர்ந்து கொள்ளப்பட்ட) மக்களாக, ஆனால் தேவனுடைய ஒரே மக்களாயிராமல் (யோனாவின் புத்தகம் காண்பிக்கிறபடி, தேவன் எல்லா மக்களினத்தைக் குறித்தும் அக்கறையாய் இருக்கின்றார்) இருந்தபடியால், இந்த விளக்கம் வேதாகமத்தின் பொதுவான சத்தியங்களை மீறுவதில்லை., பல கிறிஸ்தவ விளக்கவுரையாளர்கள் , இப்புத்தகத்தமானது சபைமீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பைப் பற்றிப் பேசுகிறது என்று பரிந்துரைக்கின்றனர், ஆனால் இந்தப் கருத்தில் பிரதானமான பிரச்சனையொன்று உள்ளது: இது சபையை அன்புகூரப்பட்ட பலரின் மத்தியில் ஒருத்தி என்றாக்குகிறது; ஆனால் விஷயம் அவ்வாறு இருப்பதில்லை (மத்தேயு 16: 18: நடபடிகள் 20:28: எபேசியர் 1:22, 23: 5:23, 25). வழக்கமாக, கொடுக்கப்பட்ட வசனப்பகுதியொன்றைப் பற்றிய எளிமையான கண்ணோட்டமே சரியான ஒன்றாயிருக்கின்றது.

## வரைகுறிப்புகள்

பிரசங்கியின் புத்தகம் வரைகுறிப்பிடக் கடினமானதாக உள்ளது. சாலொமோனின் உன்னதப்பாட்டைப் பற்றிப் பல்வேறு வகையான கண்ணோக்குகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள வரைகுறிப்புகள் இவை ஒவ்வொன்றிற்குமான ஒரு அணுகுமுறையைக் குறிக்கின்றன:

### பிரசங்கி

முன்னுரை (1:1–11)

1. சாலொமோன் ஞானத்தில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (1:12–18).
2. சாலொமோன் செல்வங்களிலும் இன்பந்தரும் வாழ்க்கையிலும் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (2,3)
3. சாலொமோன் மேன்மை, வல்லமை, மற்றும் மதிப்பு ஆகியவற்றில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (4–6)
4. சாலொமொன் உலகப் பிரகாரமானவற்றில் விலக்கப்பட்ட சிற்றின்பங்களில் சந்தோஷத்தைத் தேடுகின்றார் (7,8)
5. சாலொமோன் இவற்றில் சந்தோஷம் காணப்படுவதில்லை, ஆனால் இந்த வாழ்வில் கடமைக்கு ஒப்புவித்திருத்தல் மற்றும் வரவிருக்கும் வாழ்விற்குத் தயார் செய்து கொள்ளுதல் ஆகியவற்றிலேயே சந்தோஷம் உள்ளது என்ற முடிவுக்கு வருகின்றார் (9:1–2:7).

பின்னுரை 12:8–14)

### சாலொமோனின் உன்னதப்பாட்டு

1. காட்சி ஒன்று: அரசரின் அரண்மனையில் (1:2–2:7).




2. காட்சி இரண்டு : மணவாட்டி, வடக்கு பாலஸ்தீனத்தில் வசந்த காலத்தில் தன் மணவாளனுடன் இணைந்திருந்ததை நினைத்துப் பார்க்கின்றாள் (2:8–3:5).
3. காட்சி மூன்று : எழுத்தாளர், அரண்மனைக்கு மணவாட்டி திருமண நாளில் வந்ததை நினைத்துப் பார்க்கின்றார் (3:6–5:1)
4. காட்சி நான்கு: அரண்மனைக் காட்சிக்குத் திரும்புதல், மணவாட்டி அவளது அன்பைப் பற்றிப் பாடுகின்றாள்; அவள் மணவாளனுடன் இணைந்திருந்த காட்சிக்குத் திரும்ப விரும்புகின்றாள் (5:2–8:4).
5. காட்சி ஐந்து: வடக்கு பாலஸ்தீனத்தில், திரும்பவும் இல்லத்தில் (8:5–14).

# தேவனுடைய கிருபை அவர் சட்டத்தை ரத்து செய்கின்றதா ?

"...நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" **(யோ 1 : 17).** இந்த வசனத்தை வைத்து மோசேயின் சட்டத்தில் கிருபையும், சத்தியமும் இல்லை என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஆனால், இவை இரண்டும் கிறிஸ்துவின் மூலம் முழுமையாக கிடைத்தது என்று பொருள். மேலும், யோவான் "மோசேயின்" சட்டத்தைக் குறித்து பேசுகிறாரே தவிற, கிறிஸ்தவர்களின் விசுவாச சட்டத்தைக் குறித்து பேசவில்லை.

சட்டம் என்றால் கட்டளையிடப்பட்டதும், ஒரு செயலை செய்ய கட்டாயப்படுத்தும் சக்தியுள்ளதுமாகும். அதாவது, விசுவாசிகளை செயல்படுத்தும்படி கொடுக்கப்பட்ட வல்லமையுள்ள ஒன்றாகும் 'சட்டம்'.

தேவனுடைய கிருபையின் செயல்பாட்டை அப்போஸ்தலர்கள் நன்கு அறிந்திருந்தனர். கொடுக்கப்பட்ட கட்டளைகளில் சிலவற்றை, சபையார் கிருபை பெற்று இருப்பதினால் செய்ய தேவையில்லை என்று அவர்களில் ஒருவர்கூட நினைக்கவில்லை. தேவனுடைய கிருபை அவருடைய ஒரு கட்டளையைக் கூட ரத்து செய்வதில்லை. **யோ 14:15** "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"

இயேசு கிறிஸ்துவின் இந்த வார்த்தை, ஒரு கட்டளையைக் கூட தவிர்க்க அனுமதிப்பதில்லை. தேவனை நேசிக்கின்றேன் என்றும் அதே நேரத்தில் கிருபை பெற்றிருப்பதால் என் பொறுப்புகளில் இருந்து விடுதலையானேன் என்றும், ஒருவர் சொல்லக்கூடாது.

ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் வல்லமையுள்ள, அன்பின் சக்தியாக தேவனுடைய கிருபை விளங்குகிறது. தேவனுக்கு சேவை (வேலை) செய்ய விருப்பமுள்ள இருதயத்தையும் ஆத்துமாவையும் பெலப்படுத்தக் கூடியதாக கிருபையிருக்கிறது. ஆகையால், தன் பெலத்தை மிஞ்சி பெலத்தைவிட அதிகமாக ஒருவரை செயல்பட வைக்கிறது கிருபை : தன் நிருபங்களை வாசிப்பவர்கள் மீது தேவனுடைய கிருபை இருக்க வேண்டும் என்று பவுல் தொடர்ந்து ஜெபித்தார் **(ரோ 1:3: 1 கொரி 1 : 3 கலா 1 : 3: எபி 4: 16).** பவுல் அர்த்தமற்ற வாழ்த்துகளை மறுபடியும் மறுபடியும் கூறவில்லை. தேவனுடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கின்றோம். **(எபே 2 : 8).** கிருபையில்லாமல் விசுவாசம், மனந்திரும்புதல், திருமுழுக்கு இல்லை, அதேபோல் இரட்சிப்பை பொறுத்தமட்டில் விசுவாசம், மனந்திரும்புதல், திருமுழுக்கு இல்லாமல் கிருபையும் இல்லை.

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவை குறித்து புதிய ஏற்பாட்டின் உபதேசங்களை புரிந்து கொண்டால், தேவனுடைய கிருபையை சரியாக புரிந்து கொள்ளலாம். மற்றும் அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் எந்த அளவு தேவனுடைய அன்பினால் நிறைந்து இருந்ததோ, அதே அளவு தேவனுடைய கிருபையிலும் நிறைந்து இருந்தது. **தீத்து 2:11,12** "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கதக்க தேவ கிருபையானது பிரச்சன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி'



இயேசு கிறிஸ்துவையும் தேவனுடைய கிருபையையும் பிரிக்க முடியாது.

இயேசு கிறிஸ்து என்ன போதித்தாரோ, அதை தான் தேவனுடைய கிருபையும் போதிக்கின்றது. இயேசு கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கின்றார், இரண்டில் எதையும் புறக்கணிக்க முடியாது, கூடாது.

**– தமிழில், சகோ. கியாமிலஸ்**

**டிசம்பர் மாத சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. C. சாம் சிமியோன் – சென்னை
2. M. வின்செண்ட் – கோவை
3. P. கெவின் காபிரியேல் – மதுரை
4. D. டேஃனி – சென்னை
5. D. ஜீனித்தா – சென்னை
6. R. சிட்டுதேவி – செங்கல்பட்டு
7. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை

## பாடம் 1 சகேயுவின் வாழ்வில் தேவகிருபை

தேவனின் செல்லப்பிள்ளைகளே! உங்கள் யாவரையும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன் . புது வருடம் புது ஆசீர்வாதம், புத்தாடை, கேக் என சந்தோஷமாக இருப்பீர்கள். இந்த சந்தோத்தோடே, சகேயு அண்ணனுக்கு தேவனுடைய கிருபை எப்படி கிடைத்தது என்று பார்க்கலாமா?

ஒருமுறை ஆண்டவர் இயேசு எரிகோ பட்டணத்திற்கு சென்றார். அப்போது அந்த ஊரில் சகேயு என்ற அண்ணன் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் பணக்காரராகவும், ஆயக்காரருக்கு தலைவராகவும், அதே வேளையில் குள்ளமானவராகவும் இருந்தார். அவர் இயேசுவைபற்றி கேள்விபட்டு, அவர் எப்படி இருப்பார் என தெரிந்துகொள்ள ஆசைப்பட்டு, இயேசுவைப் பார்க்க போனார்.



இயேசுவை சுற்றி பெரியக்கூட்டம் இருந்தது, சகேவும் குள்ளமாக இருந்தப்படியால் அவரால் இயேசுவை பார்க்க முடியவில்லை. ஆனாலும் சகேயு தன்முயற்சியை விடவில்லை. ஆண்டவர் இயேசு வரும் வழியில், அவருக்கு முன்னாக சென்று, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி, ஆண்டவர் வரும் பாதையில் காத்திருந்தார்.

ஆண்டவர் இயேசு, அந்த மரம் அருகில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, சகேயுவை பார்த்து : “சகேயுவே, சீக்கிரமாக இறங்கி வா ! இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டும்” என்று சொன்னார். உடனே சகேயு மரத்திலிருந்து இறங்கி, சந்தோஷமாக இயேசுவை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்கு போனார். அதைக் கண்ட அநேகர், பாவியான இவன் வீட்டிற்கு போகிறாரே என முறுமுறுத்தார்கள்.

சகேயு தன் வீட்டிற்கு ஆண்டவரை அழைத்து வந்தவுடன் என்ன செய்தார் தெரியுமா ? ஆண்டவரே ! என் ஆஸ்திகளில் பாதியை ஏழைக்கு கொடுக்கிறேன். நான் யாரிடமாவது அநியாயமாக எதையாகிலும் வாங்கியிருந்தால், நான்கு மடங்கு திரும்பி கொடுத்து விடுகிறேன் என்றார். ஆண்டவர் இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு உன் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. நீயும் ஆபிரகாமிற்கு குமரனாக இருக்கிறாய் என்றார்.

பிள்ளைகளே, சகேயு அண்ணனை பார்த்தீர்களா? ஆண்டவர் இயேசுவை பார்க்கனும்னு ஆசையாக ஓடி பார்த்தார். இயேசு அந்த சகேயுவை அழைத்து, அவன் வீட்டிற்கு சென்றார். அந்த அண்ணன் தன் வாழ்க்கை முறையை மாற்றினார். இரட்சிப்பும் கிடைத்தது! எவ்வளவு பெரிய **தேவகிருபை பார்த்தீர்களா?** நீங்களும் இந்த புது ஆண்டில் ஆசையாக தேவனை ஜெபிப்பதில் மூலம், பைபிள் படிப்பதின் மூலம், தவறாமல் சபைக்கு செல்வதின் மூலம், மற்றவருக்கு ஆண்டவரை பற்றி சொல்வதின் மூலம் தேடினீர்கள் என்றால், உங்களுக்கு தேவனுடைய கிருபை பெரிய அளவில் கிடைக்கும். செய்வீர்களா ? கர்த்தர் உங்களை கிருபையாய் வழிநடத்துவராக !

**மனன வசனம் : 2 பேதுரு 1 : 2**

தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

## பாடம் 2 தேவ கிருபையினால் உயிர் பிழைத்த மோசே

ஹாய் குட்டீஸ் ! இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். வேதாகமத்தில் தேவ கிருபையினால் காப்பற்றப்பட்ட அநேகர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை பற்றி நாம் தெரிந்துக்கொள்ளலாம்.

மோசேயை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வழிநடத்தி சென்றவர். அவர் பிறப்பின் சமயத்தில் இஸ்ரவேலர்கள் எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய தொகை பெருகிக்கொண்டே இருந்தது. அவர்கள்

பலசாலிகளாகவுமிருந்தார்கள். இதைக் கண்ட எகிப்து நாட்டின் ராஜாவாகிய பார்வோன்: பிறக்கும் இஸ்ரவேலின் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போடவும் பெண்பிள்ளைகளை உயிரோடே வைக்கவும் கட்டளையிட்டான். இந்த சமயத்தில்தான் மோசே பிறந்தார். அதினால் அவரின் தாய் அவரை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, அவரை மூன்று மாதம் ஒளித்துவைத்தார்.



அப்புறம் ஒளித்துவைக்கூடாமல், ஒரு நாணற்பெட்டி செய்து, அதிலே பிள்ளையை வைத்து, நதியின் ஓரமாய் விட்டாள். அந்த சமயத்தில் நதியில் குளிப்பதற்காக தன் பணிபெண்களோடே பார்வோனின் மகள் வந்தாள். அவள் பெட்டியைக் கண்டு, அதை எடுத்துவரச் சொன்னாள். திறந்தபோது, அதினுள்ளே பிள்ளையைக் கண்டாள். பிள்ளை அழுதது, அங்கே தூரத்திலே பிள்ளையின் சகோதரி என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வோனின் குமாரத்தியை நோக்கி : உமக்காக இந்த பிள்ளையை வளர்க்கும்படிக்கு, இதற்கு பால் கொடுக்க ஒரு எபிரெய ஸ்தீரியை அழைத்து கொண்டு வருகிறேனென்று சொல்லி, பிள்ளையின் தாயையே கூட்டி வந்தாள். இளவரசி தனக்காக அந்த பிள்ளையை வளர்க்கும்படி அந்த பெண்ணிடம் பிள்ளையைச் கொடுத்து, அவருக்கு சம்பளமும் தந்தாள். பிள்ளையின் தாய் அதை வளர்த்து பெரிதானவுடன் பார்வோனின் மகளிடம் வந்து விட்டாள். அவள் பிள்ளைக்கு மோசே என்று பேரிட்டாள். பார்த்தீங்களா குட்டீஸ், மோசேயின் வாழ்க்கையில் தேவனுடைய கிருபையை ! எந்த ராஜா தன்னைப்போல் பிறக்கிற ஆண்பிள்ளைகளை அமுக்கவேண்டுமென்று சட்டம் போட்டானோ அவனுடைய மகளே மோசேயை காப்பாற்றி தன்னுடைய மகனாக வளர்த்தாள். இந்த மோசேதான் பிற்பாடு, தன்னை கிருபையாக காப்பாற்றின தேவனாலே பெரிய காரியங்களைச் சாதித்து அவருக்கு நன்றியாக வாழ்ந்தான்.

குட்டீஸ்! நாமும்கூட தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த புது வருடத்தை பெற்றிருக்கிறோம். அதினாலே அவர் விரும்புகிறவைகளை மட்டும் செய்து அவருக்கு நன்றியாக வாழலாம்.

**மனன வசனம் : எபி 4 : 16**

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டயிலே சேரக்கடவோம்.

**– குயினி பிரதீப்.**

## சென்ற மாதம் பெயர் விடுபட்டவர்கள்

1. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
2. A. தீமோத்தேயு – செட்டிபாளையம்
3. S. அனிதா – சிவகிரி
4. S. சௌமியா – சிவகரி
5. K. பவிக்ஷா – சிவகிரி
6. Mrs. சுமதி குணசேகரன் – கடலூர்
7. ராணி சாந்தகுமாரி – மதுரை
8. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
9. ஜெ. ஜான்ஸி – ஆனைமலை
10. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
11. R. சரோஜா – தென்கலம்
12. A. கெனீத் சாம் – மதுரை
13. S. கேத்ரீன் அருள் நேசம் – மதுரை
14. R. தனுஷ் – சிவகிரி
15. K.M. சரவணன் – சிவகிரி
16. S. கீதா – சிவகிரி
17. S. ஏஞ்சல் – சிவகிரி
18. S. மேகி – சிவகிரி
19. K. சதீஸ் – சிவகிரி
20. K. பிரியா – சிவகிரி
21. K. மௌனிகா தேவி – சிவகிரி
22. A. நந்தினி – சிவகிரி
23. N. பானுபிரியா – சிவகிரி
24. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
25. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி

# ஜனவரி மாத கேள்விகள்

1. கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ எது சூழ்ந்து கொள்ளும்?
2. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது எதினால் ?
3. தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் எப்படியிருக்கிறார் ?
4. தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் அளிப்பது என்ன?
5. நோவாவிற்கு கர்த்தருடைய கண்களில் கிடைத்தது என்ன?
6. 'கிருபை பெற்றவளே வாழ்க' என யார் யாரிடம் சொன்னது?
7. கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று என்ன செய்யும்?
8. கிருபையும் சத்தியமும் யார் மூலம் உண்டாயின ?
9. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மேல் அவர் கிருபை எவ்வளவு பெரிதாயிருக்கிறது ?
10. காலையிலே எங்களை உமது '..........................' திருப்தியாக்கும்.

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-02-2017**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## டிசம்பர் மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. லூக்கா 17:17,18 | 2. எபி 13:15 | 3. ஆதி 8:20 |
| 4. ஆதி 35:14 | 5. சங் 103:2 | 6. சங் 50:23 |
| 7. லூக்கா 22:19 | 8. வெளி 2:12 | 9. சங் 100:4 |
| 10. II கொரி 9:15 | | |

## டிசம்பர் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
2. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
3. S. அசோக்குமார் பிரின்ஸ் – கச்சனாவிளை
4. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
5. Mr.I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
6. Mrs. பிரேமலதா சுந்தர் பாபு – செங்கல்பட்டு
7. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
8. D. மோசஸ் – தஞ்சாவூர்
9. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
10. J.செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
11. T.ஆனிஸ் பிரிடாரோஸ் – சென்னை
12. Mr. சூசைமரியன் – சென்னை
13. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
14. R. சரோஜா – தென்கலம்
15. J. விஜய் – வளர்நகர்
16. G.ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
17. Mrs.பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
18. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
19. Mrs.A.சந்திரா – மதுரை
20. R. பால் ஜெயராஜ் – சென்னை
21. A. ரோஸ்மேரி – சென்னை
22. Mrs.ஜெமி நல்லையா – மதுரை
23. Y.சுதா சகாயம் – சென்னை
24. Mrs. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
25. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
26. A. தீமோத்தேயு – செட்டிபாளையம்
27. Mrs. ரூபாவதி நோபிள் – நெல்லை
28. Mrs. மேரிராஜ் – மதுரை
29. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
30. Mrs.மேரி சாராள் – சமயநல்லூர்
31. Mrs.காந்தா மனோகரன் – திருச்சி
32. K. மோகன் – கொமாராபாளையம்
33. J. மாலதி ஜெயசெல்வம் – சீர்காழி
34. Mrs. ஹெலன் திலக் – மதுரை
35. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
36. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
37. Mrs.S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
38. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
39. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
40. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
41. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
42. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
43. J. ஜான்சி – ஆனைமலை
44. Mrs.C. லீமா ரோஸ் – சென்னை
45. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
46. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
47. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
48. Dr.D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
49. D. குளோரி திலகவதி – ஈரோடு
50. Dr.I. அன்பு சுதந்திரம்– ஏர்வாடி
51. C. பூபதி லாரன்ஸ் – கோவை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# 2016 ஆண்டின் இறுதியில் நமது அன்பின் பரிசுகள்















ஏழை பார்வையற்றோர், திக்கற்றோர் மற்றும் விதவைகளுக்கு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக புத்தாடைகள், 10 கிலோ அரிசி, டிராவல் பேக் மற்றும் அன்பின் விருந்து கொடுக்கப்பட்டது.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th January 2017

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!




மதுரையில் நடைபெற்ற ஆண்டு இறுதி ஸ்தோத்திர கூட்டம்




மதுரையில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சியின் போது




சூளூர்பேட்டையில் நடைபெற்ற
கருத்தரங்கில் நமது இணை ஆசிரியர்
செய்தியளித்தபோது..

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers